தூய்மைப் பணியாளர்கள் 125 பேருக்கு புத்தாடைகள்



துடியலூரில் நடைபெற்ற விழாவில் தூய்மைப் பணியாளர்களுக்கு புத்தாடைகளை வழங்கிப் பாராட்டிய கௌமார மடாலயம் சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள்.

பெ.நா.பாளையம், அக்.30: தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு துடியலூர் காளியம்மாள் அறக்கட்டளை சார்பில் கோவை மாநகராட்சி 14, 15-ஆவது வார்டுகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் 125 பேருக்கு சேலை, வேட்டி, சட்டைகள் ஆகியவற்றை கௌமார மடாலயம் சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் வழங்கினார்.

இந்த அறக்கட்டளை கடந்த 13 ஆண்டுகளாக பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் கோவை மாநகராட்சிக்குள்பட்ட வார்டுகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு, தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடும் விதமாக புத்தாடைகளை வழங்குவது வழக்கம்.

அந்த வகையில் வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவுக்கு அறக்கட்டளை செயலாளர் வி.கே.சண்முகம், பொருளாளர் சுந்தரம், டிரஸ்ட்டி ராஜகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக கௌமார மடாலயம் சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் கலந்துகொண்டு, ஆசியுரை வழங்கி தூய்மைப் பணியாளர்களுக்கு புத்தாடைகளை வழங்கினார்.

இந்த நிகழ்வில் காளியம்மாள் அறக்கட்டளை நிர்வாகிகள், குபேர ஆஞ்சனேயர் கோயில் நிர்வாகக் குழு தலைவர் சுப்பிரமணியன், கணபதி மார்ட் மேலாளர் அகிலன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

பெ.நா.பாளையம் பேரூராட்சி கவுன்சிலர்கள் உள்ளிருப்பு போராட்டம்



பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சித் தலைவர் வெ.விஸ்வபிரகாஷ் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற உள்ளிருப்பு போராட்டத்தில் பங்கேற்ற கவுன்சிலர்கள்.

பெ.நா.பாளையம், அக்.30: பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குள்பட்ட அனைத்து வார்டுகளிலும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்குவது இல்லை எனக் கூறி, 18 கவுன்சிலர்கள் மன்ற கூட்ட அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் திமுக -13, அதிமுக - 5, சிபிஎம் ஒருவர் என 19 பேர் கவுன்சிலர்களாக உள்ளனர். திமுகவைச் சேர்ந்த விஸ்வபிரகாஷ் தலைவராக உள்ளார்.

இந்நிலையில் பேரூராட்சி மன்றத்தின் மாதாந்திரக் கூட்டம் பேரூராட்சித் தலைவர் விஸ்வபிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட வார்டு உறுப்பினர்கள், தங்களது வார்டுகளில் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு அலுவலர்கள் உரிய ஒத்துழைப்பு வழங்கவில்லை எனக் குற்றச்சாட்டு எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த செயல் அலுவலர் சீனிவாசன், அத்தியாவசிய அடிப்படை பணிகளுக்கு உரிய அனுமதி பெற்று தொடர்ந்து வளர்ச்சிப் பணிகள் நடைபெறுகின்றன என தெரிவித்தார்.இதனை ஏற்க மறுத்த கவுன்சிலர்கள் அனைவரும் பேரூராட்சித் தலைவர் விஸ்வ பிரகாஷ் தலைமையில் செயல் அலுவலரை சுற்றி அமர்ந்து உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி உரிய தீர்வு காணாவிட்டால் சாலை மறியல் உள்ளிட்ட போராட்டங்கள் நடத்த உள்ளோம் என தெரிவிக்கப்பட்டது.

ஜவுளிக் கடை உரிமையாளரிடம் வழிப்பறி: இளைஞர் கைது

கோவை, அக். 30: ஜவுளிக் கடை உரிமையாளரை கத்திமுனையில் மிரட்டி பணம் பறித்த இளைஞரை போலீஸார் கைது செய்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம், இல்லுப்பூரைச் சேர்ந்தவர் கோபால் (28). இவர் காந்திபுரம் கிராஸ்கட் சாலையில் சொந்தமாக ஜவுளிக் கடை வைத்துள்ளார். கடந்த 26-ஆம் தேதி இரவு கோபால் தனது கடையைப் பூட்டிவிட்டு காளிங்கராயன் வீதி மாநகராட்சி வாகன நிறுத்தம் அருகே நடந்து சென்றுள்ளார். அப்போது, அங்கு வந்த புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியைச் சேர்ந்த அலாவுதீன் (24) மது அருந்த பணம் கேட்டு மிரட்டியுள்ளார்.

கோபால் பணம் தர மறுத்ததால், கத்தியைக் காட்டி கொலை செய்துவிடுவதாக மிரட்டல் விடுத்து அவரிடமிருந்து ரூ.820-ஐ பறித்துவிட்டு தப்பியோட முயன்றார். கோபால் சப்தமிட்டதைத் தொடர்ந்து, பொதுமக்கள் திரண்டு அலாவுதீனைப் பிடித்து காட்டூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். போலீஸார் வழக்குப் பதிந்து அலாவுதீனைக் கைது செய்தனர்.

எஸ்.என்.எஸ்.ராஜலட்சுமி கல்லூரியில் பன்னாட்டு தொழில்நுட்பக் கருத்தரங்கு



கோவை எஸ்.என்.எஸ்.ராஜலட்சுமி கல்லூரியில் நடைபெற்ற பன்னாட்டு கருத்தரங்கில் கலந்துகொண்டோர்.

கோவை, அக்.30: வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் குறித்த இரண்டு நாள்கள் பன்னாட்டு கருத்தரங்கு, கோவை எஸ்.என்.எஸ். ராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது.

எஸ்.என்.எஸ்.கல்வி நிறுவனங்களின் தாளாளர் மருத்துவர் எஸ்.ராஜலட்சுமி, தொழில்நுட்ப இயக்குநர் எஸ்.நளின் விமல்குமார் ஆகியோர் வழிகாட்டுதலின்படி இந்த கருத்தரங்கு நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் இரா.அனிதா வரவேற்றார். முதன்மை அதிகாரி மு.டேனியல் தலைமை உரை ஆற்றினார்.

தென்னாப்பிரிக்காவின் டர்பன் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ரோசலின் கோவென்டர் தொடக்க உரை ஆற்றினார். மோரிசஸ் உயர்நிலை கல்வி நிறுவனத்தின் இயக்குநர் மற்றும் பதிவாளர் பாசிலா பானு வாழ்த்தினார். டர்பன் தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தின் பொறுப்பு இயக்குநர் ஷோபா முதன்மை உரை ஆற்றினார்.

இரண்டாம் நாள் கருத்தரங்கில் நேபாளத்தில் உள்ள மாதேஷ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அஞ்சய் குமார் மிஸ்ரா சிறப்புரையாற்றினார்.

பல துறைகளைச் சார்ந்த கல்வி வல்லுநர்களின் தலைமையில் நடைபெற்ற அமர்வுகளில் 246 ஆய்வாளர்கள் தங்களது ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். விருதுக்காக 9 சிறந்த கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இளநிலை வணிக நிர்வாகவியல் துறை தலைவர் ப.சிவக்குமார் நன்றி கூறினார்.

'பெரியார் அறிவுலகம்' அமைத்ததற்காக நவ.4-இல் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு விழா



கோவை, அக். 30: 'பெரியார் அறிவுலகம்' அமைத்ததற்காக முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலினுக்கு திராவிடர் கழகம் சார்பில் நவம்பர் 4-ஆம் தேதி பாராட்டு விழா நடைபெற உள்ளது.

கோவை மாநகர், காந்திபுரத்தில் ரூ.300 கோடி மதிப்பில் பெரியார் அறிவுலகம் அமைக்கப்பட்டுள்ளது. திமுக ஆட்சியில் பணிகள் தொடங்கப்பட்ட இந்த நூலகத்துக்கு 'பெரியார் அறிவுலகம்' என்று முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெயர் வைத்தார். கடந்த பிப்ரவரி மாதம் அப்போதைய முதல்வர் ஸ்டாலினால் 'பெரியார் அறிவுலகம்' திறக்கப்பட இருந்த நிலையில், பணிகள் முழுமை பெறாததால் திறக்கப்படவில்லை.

இந்நிலையில், பணிகள் முழுமையடைந்த 'பெரியார் அறிவுலகம்' கட்டடத்தை முதல்வர் ச.ஜோசப் விஜய், கடந்த அக்டோபர் 16-ஆம் தேதி தொடங்கிவைத்தார். இந்நிலையில், பெரியார் ஈவெரா பெயரில் நூலகம் அமைத்ததற்காக முன்னாள் முதல்வர் ஸ்டாலினுக்கு திராவிடர் கழகம் சார்பில் நவம்பர் 4-ஆம் தேதி மாலை 4 மணிக்கு வ.உ.சி.மைதானத்தில் பாராட்டு விழா நடைபெற உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து திமுகவினர் கூறியதாவது:

நவம்பர் 4-இல் ஸ்டாலினுக்கு பாராட்டு விழா நடைபெறுவதுடன், நீலாம்பூரில் திமுக மாவட்ட அலுவலக கட்டடப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற உள்ளது. அதிலும் ஸ்டாலின் பங்கேற்க உள்ளார். இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக, நவம்பர் 4-ஆம் தேதி காலை சென்னையில் இருந்து விமானம் மூலமாக கோவை வரும் அவர், முதல் நிகழ்ச்சியாக நீலாம்பூர் கட்சி அலுவலகத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவிலும், மாலையில் நடைபெறும் பாராட்டு விழாவிலும் கலந்துகொள்ள உள்ளார்.

அதைத்தொடர்ந்து, பெரியார் அறிவுலகத்துக்கு சென்று பார்வையிட உள்ளார். இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றனர்.

தீபாவளிப் பண்டிகை

நெரிசலான பகுதிகளில் காவல் ஆணையர் ஆய்வு

கோவை, அக்.30: தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கோவை மாநகரில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், முக்கிய வணிகப் பகுதிகளில் மேற்கு மண்டல காவல்துறைத் தலைவரும், மாநகர (பொறுப்பு) காவல் ஆணையருமான ஆர்.வி.ரம்யா பாரதி வெள்ளிக்கிழமை நடை ரோந்து சென்று பாதுகாப்புப் பணிகளை ஆய்வு செய்தார்.

காவல்துறைக்கும், பொதுமக்களுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்தவும், பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்தவும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. காந்திபுரம் காவல் நிலைய எல்லைக்குள்பட்ட நஞ்சப்பா சாலை, மத்தியப் பேருந்து நிலையம், கிராஸ்கட் சாலை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் காவல் துணை ஆணையர் (தெற்கு) ஜி.கார்த்திகேயனுடன் இணைந்து மாநகர ஆணையர் நடை ரோந்து மேற்கொண்டார்.

பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள காவல் துறை அதிகாரிகளுக்கு முக்கிய அறிவுரைகள் வழங்கப்பட்டன. பண்டிகைக் காலத்தில் குற்றச் சம்பவங்கள் எதுவும் நிகழாமல் தடுக்கும் வகையில் பகல் நேர ரோந்துப் பணிகளை அதிகரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் கூடுதல் கண்காணிப்பு கேமராக்கள் (சிசிடிவி) பொருத்தப்பட்டு தீவிரக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். காவல் கோபுரம் அமைத்து ஒலிப்பெருக்கி வாயிலாகப் பொதுமக்கள் தங்கள் உடைமைகளைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வது குறித்து தொடர் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தீபாவளி: மக்கள் கூடும் இடங்களில் 1,000 போலீஸார் பாதுகாப்பு

கோவை, அக்.30: தீபாவளிப் பண்டிகையையொட்டி கோவையில் மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் அசம்பாவிதங்களைத் தடுக்கும் விதமாக ஆயிரம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தீபாவளிப் பண்டிகைக்கு இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில், கோவை டவுன் ஹால், கிராஸ்கட் சாலை உள்ளிட்ட முக்கிய வணிகப் பகுதிகளில் பொதுமக்கள் கூட்டம் அலைமோதி வருகிறது. வார இறுதி விடுமுறை நாள்களை முன்னிட்டு கூட்டம் மேலும் அதிகரிக்கும் என்பதால், மாநகர காவல் துறை சார்பில் சுமார் 1,000 போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கூட்ட நெரிசலைப் பயன்படுத்தி வழிப்பறி, தங்கச் சங்கிலி பறிப்பு உள்ளிட்ட குற்றங்கள் நடைபெறாமல் தடுக்க 4 தனிப்படைகள் அமைக்கப்பட்டு, போலீஸார் சாதாரண உடையில் தீவிர ரோந்து மேற்கொண்டு வருகின்றனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பழைய குற்றவாளிகள் 10-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் மக்கள் கூடும் முக்கிய இடங்களில் 500-க்கும் மேற்பட்ட சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு, தற்காலிகக் கட்டுப்பாட்டு அறை மூலமாக 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. முக்கிய சந்திப்புகளில் உயரமான கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு, போலீஸார் பைனாகுலர் மூலமாக கூட்டத்தை கண்காணித்து வருகின்றனர்.

பொதுமக்கள் தங்கள் உடைமைகளை பாதுகாத்துக் கொள்ளுமாறு காவல் துறை சார்பில் ஒலிப்பெருக்கி மூலமாக அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

தீபாவளி: சென்னை-கொல்லம் இடையே போத்தனூர் வழித்தடத்தில் சிறப்பு ரயில்

கோவை, அக். 30: தீபாவளியையொட்டி சென்னை - கொல்லம் இடையே போத்தனூர் வழித்தடத்தில் சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளதாக ரயில்வே நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சேலம் ரயில்வே கோட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நவம்பர் 5, 12 ஆகிய தேதிகளில் (வியாழக்கிழமை) சென்னை எழும்பூரில் இருந்து இரவு 11.40 மணிக்கு புறப்படும் சென்னை - கொல்லம் சிறப்பு ரயில் (எண்: 06117) மறுநாள் மாலை 4.20 மணிக்கு கொல்லம் நிலையத்தை சென்றடையும்.

மறுமார்க்கமாக நவம்பர் 6,13 ஆகிய தேதிகளில் (வெள்ளிக்கிழமை) கொல்லத்தில் இருந்து மாலை 6.45 மணிக்கு புறப்படும் கொல்லம் - சென்னை சிறப்பு ரயில் (எண்: 06118) மறுநாள் நண்பகல் 12.30 மணிக்கு சென்னை எழும்பூரைச் சென்றடையும்.

இந்த ரயில் காயன்குளம், மாவேலிக்கரா, செங்கண்ணூர், திருவல்லா, சங்கனாச்சேரி, கோட்டயம், எர்ணாகுளம் டவுன், ஆலுவா, திருச்சூர், பாலக்காடு, போத்தனூர், திருப்பூர், ஈரோடு, சேலம், ஜோலார்பேட்டை, காட்பாடி, அரக்கோணம், திருவள்ளூர், பெரம்பூர் உள்ளிட்ட நிலையங்களில் நின்று செல்லும் என்று குறிப்பிட்டுள்ளது.

IDBI BANK

ஐடிபிஐ வங்கி லிட்
எண்.72, மே ஃபிளவர் 'E' ஹேவில், டாக்டர் பாலசுந்தரம் ரோடு, அவினாசி ரோடு அடுத்து, ATT காலனி, கோயம்புத்தூர்-641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.
ஐடிபிஐ வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய **ரூ.27,93,134/- (01.10.2026 தேதி அன்று)** தொகையை **திரு.R.மணிராஜ் மற்றும் திருமதி.M.மாலதி,** என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட, **கொள்நிலை சுவாதீனம் (Physical Possession)** செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, **25.11.2026** தேதியில் **(காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை)** விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் **'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு'** என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : **ரூ.28,00,000/-** மற்றும் முன்வைப்புத் தொகை : **ரூ.2,80,000/-.**

அசையாச் சொத்து விபரம்
கோயம்புத்தூர் மாவட்டம் - 641 104, மேட்டுப்பாளையம் தாலூகா, காரமடை கிராமத்தில் க.ச.எண்.632/1A, குரும்பனூர், குருந்தமலை ரோடு, "ஹில் வியூ ரெசிடென்சி பேஸ்-II"ல் மனை எண்.29 கிழபுறப் பகுதி மற்றும் மனை எண்.30ல் அமைந்த 2220 சதுர அடி விஸ்தீரண நிலமாகிய குடியிருப்புச் சொத்து திரு.R.மணிராஜ் மற்றும் திருமதி.M.மாலதி பெயரில் உள்ளது.
விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.baanknet.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் www.idbi.bank.in இணையதளத்தில் பார்வையிடலாம்.

தேதி : 27.10.2026 | **ஒம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
இடம் : கோயம்புத்தூர் | **ஐடிபிஐ வங்கி லிட்**

இந்தியன் வங்கி (इंडियन बैंक) — इलाहाबाद அலகாபாத்

ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் மேலாண்மை கிளை - கோயம்புத்தூர்
முதல் தளம், கார்மல் கார்டன் MHS பள்ளிக்கு அருகில், புலியகுளம் பிரதான சாலை, கோயம்புத்தூர் - 641045
கைபேசி: **9442646501** மின்னஞ்சல்: **armbcoimbatore@indianbank.co.in**

அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

2002 - ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் உடன் வாசிக்க வேண்டிய கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதி 8(6) -ல் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படியான மின்னணு ஏல அறிவிப்பு (E-auction).

இதன் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்)-க்கு குறிப்பாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில்ஈட்டுகடனாளருக்குஅளிக்கப்பட்டுள்ள,கீழேவிவரிக்கப்பட்டுள்ளஅடமான/பிணையசொத்துக்களைஈட்டுகடனாளரான **இந்தியன் வங்கி SAM கோயம்புத்தூர் கிளையின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் அடையாளப்பூர்வ சுவாதீனம் எடுத்துக் கொண்டதையடுத்து, கீழே குறிப்பிட்டுள்ள கடன் நிலுவைத்தொகை **29.10.2026** தேதிப்படி **ரூ. 4,62,81,423.65** (ரூபாய் நான்கு கோடியே அறுபத்து இரண்டு இலட்சத்து எண்பத்து ஓராயிரத்து நானூற்று இருபத்து மூன்று மற்றும் அறுபத்து ஐந்து பைசா மட்டும்) மேலும் செலுத்தப்படும் நாள் வரையிலான வட்டி, மேலதிக வட்டி மற்றும் இதர கட்டணங்களுடன் வசூலிப்பதற்காக **"எங்கு உள்ளதோ அங்கு அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "எப்படியிருந்தாலும் அப்படியே"** என்ற அடிப்படையில் **20.11.2026** அன்று கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் பெயர் மற்றும் முகவரி: 1. M/s. எஸ்டீம் இண்டஸ்ட்ரீஸ் பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திருமதி T பிரவீனா, க/பெ. G தங்கவேலு, 211/1, நேதாஜி நகர், நஞ்சுண்டாபுரம் சாலை, கோயம்புத்தூர் 641 036 **(கடன்தாரர்). 2. M/s ஸ்வாகத் இன்ஜினியரிங்ஸ் பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திரு G வேல்முருகன்**, த/பெ. (லேட்) திரு குருசாமி நாயுடு, 211/1, நேதாஜி நகர், நஞ்சுண்டபுரம் சாலை, கோயம்புத்தூர் 641 036 **(கடன்தரர்). 3. திருமதி T பிரவீனா**, க/பெ. ஜி தங்கவேலு, 209, நேதாஜி நகர், நஞ்சுண்டபுரம் சாலை, கோயம்புத்தூர் 641 036 **(உரிமையாளர் M/s. எஸ்டீம் இண்டஸ்ட்ரீஸ் / ஜாமீன்தாரர் M/s ஸ்வாகத் இன்ஜினியரிங்ஸ்), 4. திரு. G வேல்முருகன்**, த/பெ. (லேட்) திரு குருசாமி நாயுடு, 211/1, நேதாஜி நகர், நஞ்சுண்டபுரம் சாலை, கோயம்புத்தூர் 641 036 **(உரிமையாளர் M/s. ஸ்வாகத் இன்ஜினியரிங்ஸ் / அடமானதாரர் / ஜாமீன்தாரர் M/s எஸ்டீம் இண்டஸ்ட்ரீஸ்). 5. திரு. G தங்கவேலு**, த/பெ. (லேட்) திரு குருசாமி நாயுடு, 211/1, நேதாஜி நகர், நஞ்சுண்டாபுரம் சாலை, கோயம்புத்தூர் 641 036 **(ஜாமீன்தாரர் M/s. எஸ்டீம் இண்டஸ்ட்ரீஸ்).**

மின்னணு ஏல விற்பனையில் கொண்டுவரப்படவுள்ள சொத்தின் முழு விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

அடமான சொத்தின் விரிவான விபரம்	**PROPERTY ID No. IDIB995908270:** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பீளமேடு சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா, ராமநாதபுரம் கிராமம், SF எண். 211/1ன் 1.64 ஏக்கரில் மேற்குப் பகுதியில் 0.56 ஏக்கர் அதில் ஒரு பகுதியின் அளவு 2420 சதுர அடி நிலம். அதன் எல்லைகள் மற்றும் அளவுகள் பின்வருமாறு: வடக்காக - கிழக்கு-மேற்கு சாலை, தெற்காக- SF எண் 210/2ன் நிலம், கிழக்காக - குருசாமி நாயுடுவின் சொத்து, மேற்காக - காலி நிலம். இதன் நடுவில் கிழக்கு மேற்காக வடக்குபுறம் - 47 அடி, கிழக்கு மேற்காக தெற்குபுறம் - 47 அடி, வடக்கு தெற்காக கிழக்குபுறம் - 49½ அடி, வடக்கு தெற்காக மேற்குப்புறம் - 53½ அடி. ஆகமொத்தம் 2420 சதுர அடி அல்லது 5 சென்ட் 242 சதுர அடி நிலம் அதனுடன் AC தகடினால் மேற்கூரையிடப்பட்டு கட்டப்பட்ட கட்டிடம் அதனுடன் பொதுவான மனைப் பிரிவு சாலைகள் பயன்படுத்துவது மற்றும் இதர வசதிகளைப் பயன்படுத்துவதற்கு உரிமை உள்ளது. கதவு எண் 211/1, நேதாஜி நகர் வரி மதிப்பீட்டு எண் 204742 மின் இணைப்பு எண் 046-004-1098. இச்சொத்து கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லையில் உள்ளது. குறிப்பு: அடமானதாரரின் தந்தை பெயரில் உள்ள நிலத்தில் ஒரு பகுதியில் கட்டப்பட்ட தரை தளத்தில் மற்றும் முதல் தளத்தில் RCCயால் GI தகடுகள் வேயப்பட்ட தொழிற்சாலை கிடங்கு கட்டிடம் (890 சதுர அடி) மேலே கூறப்பட்ட நிலத்தில் ஒரு பகுதியில் கட்டப்பட்டுள்ளது. இதன் அளவு: 5.55 சென்ட், நிலத்தின் உரிமையாளர் பெயர்: G. வேல்முருகன் த/பெ. குருசாமி.
வில்லங்கம் ஏதேனும் உள்ளதா	**வங்கிக்கு தெரிந்தவகையில் இல்லை**
ரிசர்வ் விலை	**ரூ. 92,00,000/- (தொண்ணூற்று இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்)**
டேவணித்தொகை	**ரூ. 9,20,000/- (ஒன்பது இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்)**
ஏலத்தொகை அதிகரித்தல்	**ரூ. 25,000/- (இருபத்தைந்தாயிரம் ரூபாய் மட்டும்)**
மின் ஏல தேதி மற்றும் நேரம்	**20.11.2026 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை (கணக்கில்லா 10 நிமிட கால நீட்டிப்புடன் விற்பனை முடியும் வரை)**
சொத்து id எண்	**IDIB995908270**

** GST/TDS மற்றும் இதர சட்டப்பூர்வ நிலுவைத் தொகைகள் விதிகளுக்கேற்ப பொருந்தும்.
ஏலதாரர்கள் ஆன்லைன் ஏலத்தில் பங்கேற்பதற்கு எங்களது மின்னணு ஏல சேவை வழங்குநரின் இணையதளத்தை **(https://baanknet.com)** பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழில்நுட்ப உதவிக்கு PSB அலையன்ஸ் பிரைவேட் லிமிடெட் உதவி மைய எண். 8291220220, email ID:- support.baanknet@psballiance.com மற்றும் சேவை வழங்குநரின் உதவி மையத்தில் உள்ள பிற உதவி எண்களுக்கு அழைக்கவும். PSB அலையன்ஸ் பிரைவேட் லிமிடெட் உடன் ஆன பதிவு நிலை மற்றும் டேவணித் தொகை பற்றி அறிய, தயவுசெய்து support.baanknet@psballiance.com. தொடர்பு கொள்ளவும்.
சொத்து விவரங்கள் மற்றும் சொத்தின் புகைப்படம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://baanknet.com பார்வையிடவும் மற்றும் இந்த போர்ட்டல் தொடர்பான விவரங்களுக்கு தயவுசெய்து உதவிமைய எண். '8291220220' தொடர்பு கொள்ளவும்.
ஏலதாரர்கள் https://baanknet.com இணையதளத்தில் உள்ள சொத்து தேடுதலின்போது, மேலே குறிப்பிட்டுள்ள சொத்து IDஎண்ணைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தொடர்பு கொள்ள வேண்டிய நபர்: அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / கிளை மேலாளர்: தொலைபேசி எண்: 9442646501
இடம் : கோயம்புத்தூர்
நாள் : 30.10.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்தியன் வங்கி

இந்தியன் வங்கி (इंडियन बैंक) — इलाहाबाद அலகாபாத்

ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் நிர்வாக நிலைக் கிளை.
முதல் தளம், இந்தியன் வங்கி புலியகுளம் கிளை,
புலியகுளம் மெயின் ரோடு, கார்மல் கார்டன்
பள்ளி அருகில், கோயம்புத்தூர் - 641 045.
போன் : 9442646501.
மின்னஞ்சல் : armbcoimbatore@indianbank.bank.in

அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

2002-ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் உடன் வாசிக்க வேண்டிய கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதி 8(6)-ல் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படியான மின்னணு ஏல அறிவிப்பு (E-auction)

இதன் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்)-க்கு குறிப்பாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் ஈட்டு கடனாளருக்கு அளிக்கப்பட்டுள்ள, கீழே விவரிக்கப்பட்டுள்ள அடமான சொத்துக்களை ஈட்டுக் கடனாளரான **இந்தியன் வங்கி, ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் நிர்வாக நிலைக் கிளை, கோயம்புத்தூரின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் **அடையான சுவாதீனம்** எடுத்துக் கொண்டதையடுத்து, கடன் நிலுவைத் தொகையான **ரூ.14,04,76,653/- (ரூபாய் பதினான்கு கோடியே நான்கு லட்சத்து எழுபத்து ஆறாயிரத்து அறுநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) (29.10.2026-ன்படி)** மேலும் மேலதிக வட்டி, செலவுகள் மற்றும் பிற கட்டணங்களுடன் சேர்த்து வசூலிப்பதற்காக, **"எங்கு உள்ளதோ அங்கு அப்படியே", "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "எப்படியிருந்தாலும் அப்படியே"** என்ற அடிப்படையில் ஈட்டுக் கடனாளரான இந்தியன் வங்கி, கோயம்புத்தூர், ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் நிர்வாக நிலைக் கிளையால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் **20.11.2026** அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன்தாரர்/ஜாமீன்தாரர் பெயர் மற்றும் முகவரி 1. **M.பழனிசாமி,** த/பெ. G.மாரப்ப கவுண்டர், எண்.55/2, பெர்க்ஸ் வளாகம், உப்பிலிபாளையம், கோயம்புத்தூர் - 641 015 **மேலும் :** எண்.107 A, சென்குப்தா வீதி, ராம்நகர், கோயம்புத்தூர் - 641 009. **2. O.ஆறுமுகசாமி,** த/பெ. ஒலிகார கவுடர், எண்.213, A T D ரோடு, ரேஸ் கோர்ஸ், கோயம்புத்தூர் - 641 018 **மேலும் :** எண்.107 A, சென்குப்தா வீதி, ராம்நகர், கோயம்புத்தூர் - 641 009 **(உத்தரவாதமளித்தவர்/அடமானதாரர்).**

மின்னணு ஏல முறையில் விற்பனைக்குக் கொண்டுவரப்படவுள்ள சொத்தின் முக்கிய விவரங்கள் பின்வருமாறு :

அசையாச் சொத்து : சொத்து ID No.IDIB706750633B - கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலூகா, கோயம்புத்தூர் முனிசிபல் டவுன், பழைய வார்டு எண்.9, புதிய வார்டு எண்.28, அனுப்பர்பாளையம் கிராமம், பட்டா எண்.113, டவுன் சர்வே எண்.91/1, பழைய டவுன் சர்வே எண்.9/30/1, புதிய டவுன் சர்வே எண்.9/147/1B, ரங்கநாதபுரம் மேலும் கோயம்புத்தூர் மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட வெங்கடசாமி நாயுடு லே அவுட், இதில் பிளானின்படி, கிழமேல் சென்குப்தா வீதிக்கு வடக்கு, குமரவேலின் சொத்துக்குத் தெற்கு, C.S.வெங்கட்ராமன் ஐயர் வீட்டுக்குக் கிழக்கு, டாக்டர். S. தர்மராஜின் சொத்துக்கு மேற்கு. இவ்வெல்லைகளுக்கிடையில், அளவுகளாக, தென்வடல் கிழபுறம் - 75 அடி, தென்வடல் மேற்புறம் - 70 அடி, கிழமேல் வடபுறம் - 42½ அடி, கிழமேல் தென்புறம் - 41 ½ அடி. சேர்ந்த மொத்தம் 3045 சதுரடி அல்லது 6.98 சென்ட் நிலம், தரைத் தளம் மற்றும் முதல் தளம் உள்ளடக்கிய ஆர்சிசி தார்க் கட்டிடம் மற்றும் அனைத்துப் பிற பாத்தியதைகளுடன். மின்சார பிட்டிங்குகள், மின்னிணைப்பு, குடிநீரிணைப்பு மற்றும் அவைகளின் காப்புத் தொகைகளுடன். கதவு எண்.107, சென்குப்தா வீதி, ராம்நகர், பழைய டவுன் சர்வே எண்.9/30/1, புதிய டவுன் சர்வே எண்.9/147/1B, ரங்கநாதபுரம், டவுன் சர்வே வார்டு எண்.28, வரி விதிப்பு எண்.96596, சர்வீஸ் இணைப்பு எண்.223 மற்றும் 224, குடிநீரிணைப்பு எண்.15168. மேற்படி சொத்து சென்குப்தா வீதியில், கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்டு உள்ளது.

குறிப்பு : கட்டிடமானது பகுதி அடமான நிலத்திலும் மேலும் பகுதி அடமானதாரரின் அண்டை நிலத்திலுமாக கட்டப்பட்டுள்ளது. அளவு : 6.98 சென்ட் அல்லது 3045 சதுரடி. **அடமானதாரர் பெயர் : O. ஆறுமுகசாமி.**
சொத்தின் மீதான ஏதேனும் வில்லங்கங்கள் : Nil

ரிசர்வ் விலை : ரூ.3.93.00.000/- (ரூபாய் மூன்று கோடியே தொண்ணூற்று மூன்று லட்சம் மட்டும்)
EMD : ரூ.39.30.000/- (ரூபாய் முப்பத்து ஒன்பது லட்சத்து முப்பதாயிரம் மட்டும்)
ஏல அதிகரிப்பு தொகை : ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)

சொத்து மற்றும் அதன் தொடர்பான ஆவணங்கள் ஆய்வு தேதி மற்றும் நேரம் :
12.11.2026 முதல் 13.11.2026 வரை, காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம் : 20.11.2026 முற்பகல் 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை ஏலம் தொடரும்பட்சத்தில் 10 நிமிட எண்ணற்ற நீட்டிப்புகளுடன், விற்பனை நிறைவு பெறும் வரை.

ஏலதாரர்கள் இந்த ஆன்லைன் ஏலத்தில் பங்கேற்பதற்கு எங்களது மின்னணு ஏல சேவை வழங்குநர் PSB அலையன்ஸ் பி. லிட்-ன் இணையதளத்தினை **(https://baanknet.com)** பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழில்நுட்ப உதவிக்கு PSB அலையன்ஸ் பி. லிட், உதவி மைய எண்.8291220220, மின்னஞ்சல் : support.baanknet@psballiance.com மற்றும் சேவை வழங்குநரின் உதவி மையத்தில் உள்ள பிற உதவி எண்களுக்கு அழைக்கவும். PSB அலையன்ஸ் பி. லிட் உடன் ஆன பதிவு நிலை மற்றும் EMD நிலை பற்றி அறிய தயவு செய்து support.baanknet@psballiance.com ஐ தொடர்பு கொள்ளவும்.
சொத்து விவரங்கள் மற்றும் சொத்தின் புகைப்படம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://baanknet.com ஐ பார்வையிடவும் மற்றும் இந்த போர்ட்டல் தொடர்பான விவரங்களுக்கு தயவு செய்து உதவி மைய எண். 8291220220 ஐ தொடர்பு கொள்ளவும்.
ஏலதாரர்கள் https://baanknet.com இணையதளத்தில் உள்ள சொத்து தேடுதலின்போது, மேலே குறிப்பிட்டுள்ள சொத்து ID எண்ணைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 30.10.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்தியன் வங்கி

IndusInd Bank | இண்டஸ்இண்ட் வங்கி லிமிடெட், புதிய எண் 34, பழைய எண் 115/116, 2-வது தளம், G.N. செட்டி சாலை, தி. நகர், சென்னை - 600017, தமிழ்நாடு, இந்தியா.

தங்க நகை E-ஏலம் குறித்த பொது அறிவிப்பு.

இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் பிறர் இண்டஸ்இண்ட் வங்கி லிமிடெட்டிலிருந்து தங்க நகைக் கடன் வசதியைப் பெற்றனர். கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதாலும், ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறியதாலும் இந்தக் கடனுக்காக அடகு வைக்கப்பட்ட தங்க நகையை இப்போது பகிரங்க பொது ஏலம்விட திட்டமிடப்பட்டுள்ளது. அந்தந்த ஏலத்தினால் கிடைக்கக்கூடிய தொகை/ரசீது தொகை அவர்களின்/கடன்தாரர்களின் அவரவர் கடன் கணக்கு(கள்) மற்றும் இணைக்கப்பட்ட கடன் கணக்குகளில் வரவு வைக்கப்படும். அடகு வைக்கப்பட்ட தங்க நகை "உள்ளது உள்ள இடத்தில், உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ள நிலையில்" என்ற அடிப்படையில் ஏலம் விடப்படும். ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள், இண்டஸ்இண்ட் வங்கியின் இணையதளத்தில் (www.indusind.com) குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளையும், அங்கீகரிக்கப்பட்ட ஏல சேவை நிறுவனத்தின் நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டும்.
இந்த ஏலம், பின்வரும் இண்டஸ்இண்ட் வங்கி லிமிடெட் கிளையில் நடைபெறும்.
ஏல ஆவணங்கள், உறுதிமொழிப் படிவம் மற்றும் பொது நிபந்தனைகள் குறித்த விவரங்களை இண்டஸ்இண்ட் வங்கியின் இணையதளத்தில் (https://www.indusind.com) காணலாம் அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளையில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
தனது சொந்த விருப்பத்தின் பேரில் விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் எதையும் திருத்துவதற்கான அல்லது மாற்றுவதற்கான உரிமையை அதிகாரப்பூர்வ அலுவலர் கொண்டுள்ளார்.

G L கணக்கு எண்	வாடிக்கையாளர் பெயர்	கிளை	கிளை தொடர்பு எண்	தங்கத்தின் நிகர எடை
704001451297	நிஜாமுதீன் நிசார் அகமது	கோயம்புத்தூர்	9487022931	89.5

ஏலம் நடைபெறும் இடம்: இண்டஸ்இண்ட் வங்கி லிமிடெட், 652-662, டிரினிடார் டவர்ஸ் அவினாசி சாலை, கோயம்புத்தூர்-641037

G L கணக்கு எண்	வாடிக்கையாளர் பெயர்	கிளை	கிளை தொடர்பு எண்	தங்கத்தின் நிகர எடை
704001472827	சம்பத் பெருமாள்	ராம் நகர்	9789663617	17.1

ஏலம் நடைபெறும் இடம்: இண்டஸ்இண்ட் வங்கி லிமிடெட், ரமணி பராஸ், 239, விவேகானந்தா சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் -641009

ஏலம் நடைபெறும் தேதி:1-டிசம்பர் 2026, காலை 10.00 மணி முதல்.
ஏலம் தொடங்குவதற்கு முன்பு முழு கடனையும் திருப்பிச் செலுத்தும் உரிமை கடன்தாரர்களுக்கு உண்டு அவ்வாறு செய்வதன் மூலம், இண்டஸ்இண்ட் வங்கி லிமிடெட்டின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி அவர்கள் அடகு வைக்கப்பட்ட தங்கத்தை மீட்டெடுக்கலாம்.
ஏலத்தில் பங்கேற்பதற்கு GST எண் கட்டாயமாகும்.
நாள் : 30.10.2026 | அதிகாரபூர்வ கையொப்பமிட்டவர்
இடம் : கோயம்புத்தூர் | இண்டஸ்இண்ட் பேங்க் லிமிடெட்